நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 253/2024**

**P.W. 1 –ன் வாக்குமூலம்**

**( புகார்தாரர் தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | அங்குராஜ் |
| தந்தை / கணவர் பெயர் | : | அங்கப்பன் |
| கிராமம் | : | மாதையன்கோட்டை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 47 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜூலை மாதம், 24–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**புகார்தாரர் ஆஜரில் இல்லை அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–03.33 PM.)

1. என்னுடைய முகவரி 10/125, ராஜாஜி நகர் மாதையன் குட்டை மேட்டூர் ஆகும். எதிரியின் அப்பா பெயர் வெங்கட்ராமன். எதிரி சிமெண்ட் கம்பெனிகளுக்கு நிலக்கரி சாம்பல் சப்ளை செய்யும் தொழில் செய்து வருகிறார். இப்போது எதிரி அந்த தொழிலை செய்கிறாரா என்று எனக்கு தெரியவில்லை.

2. மேற்படி எதிரி மேட்டூர் சிட்கோவுக்குள் ஸ்குரு யூனிட் வைத்திருந்தார் பொதுவாக அனல் மின் நிலையத்திலிருந்து நிலக்கரி சாம்பல் நேரடியாக சிமெண்ட் நிறுவனத்திற்கு தான் அனுப்பப்படும் ஆனால் அதை சட்டத்துக்கு முரணாக சேகரித்து அதை சிமெண்ட் கம்பெனிகளுக்கு எதிரி விற்று வந்தார். மேற்படி M.A.M. Ash Movers என்ற நிறுவனம் எதிரியின் தனி உரிமை நிறுவனம் ஆகும். அந்த நிறுவனத்தை பற்றி எனக்கு தெரியும்.

3. மேற்படி நிறுவனத்தை சந்திரசேகர் வினோத் சீனிவாசன் ஆகியோர் சேர்ந்துதான் ஆரம்பித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. நான் பத்திரிகையாளராகவும் மேற்படி அனல் மின் நிலையத்திலிருந்து நிலக்கரி சாம்பலை பெற்று நிறுவனத்திற்கு விற்கும் தொழிலும் செய்து வந்தேன். AAA டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வருகிறேன். அதுமட்டுமில்லாமல் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வந்தேன். அதுபோக அரசு அனுமதியுடன் துப்பாக்கி கடை ஒன்று வைத்துள்ளேன்.

5. எனக்கு ஐசிஐசிஐ வங்கியில் ஒரு சேமிப்பு கணக்கு ஒரு நடப்பு கணக்கு வைத்துள்ளேன். மேற்படி நடப்பு கணக்கு AAA ட்ரான்ஸ்போர்ட் நிறுவன பெயரில் உள்ளது. இந்தியன் வங்கி மேட்டூர் கிளையில் மலபார் ட்ரேடர்ஸ் என்ற எனது துப்பாக்கி கடை பெயரில் நடப்பு கணக்கு வைத்துள்ளேன். அதுபோக அதை வங்கியில் சேமிப்பு கணக்கு ஒன்றும் வைத்துள்ளேன்.

6. மேற்படி வங்கி கணக்குகளில் பணம் பரிவர்த்தனை செய்து கொண்டு தான் இருக்கிறேன்.

7. மேற்படி கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(03.45 PM.)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை**

செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/– நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.